# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.57/2020

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் வா.சா.–1 | சாதி | |
| த/பெ. | வெங்கட்ராமன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

---

முதல் விசாரணை 01–07–2025.

நான் இந்த வழக்கின் 1ம்வாதி. 2ம் வாதி என் அண்ணன் மகன். வாதிகள் தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் 2ம் வாதிக்கும் சேர்த்து தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

14.11.1941ம் தேதியிட்ட நம்மாழ்வார் நாயக்கர் தந்தை திருவேங்கடப்ப நாயக்கர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** பிராது வரைபடம் நகல் **வா.சா.ஆ.2,** 06.06.1992ம் தேதியிட்ட சர்வே எண்.107/213B இடத்திற்கு என்னுடைய பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.3,** 06.06.1992ம் தேதியிட்ட சர்வே எண்.107/214 இடத்திற்கு 2ம்வாதி பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.4,** 06.06.1992ம் தேதியிட்ட சர்வே எண்.107/217 இடத்திற்கு 2ம்வாதி பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.5,** 27.02.2008ம் தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் இணையதள நகல் **வா.சா.ஆ.6**, 26.05.2020ம் தேதியிட்ட என்னுடைய பெயரில் உள்ள

வீட்டுவரி ரசீது அசல் **வா.சா.ஆ.7**, 18.12.2019 ம் தேதியிட்ட என்னுடைய பெயரில் உள்ள மின்கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.8**, என்னுடைய ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **வா.சா.ஆ.9**, 2 ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **வா.சா.ஆ.10**, நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1**, நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.01 13:30:57 +0530